மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

02.11.2022 புதன்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் கொழும்பில் ஆரம்பம்

## பெருமளவான மக்கள் பங்கேற்பு

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் கொழும்பில் இன்று (02) ஆரம்பமாகியுள்ளது. மருதானை சுற்றுவட்டப் பகுதியில் இந்தப் போராட்டம் தற்போது ஆரம்பமாகியுள்ளது. இதன்போது, அடக்குமுறையை நிறுத்து, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு போன்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தி போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர மற்றும் முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபா உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

அத்தோடு, பொது மக்களும் பெருமளவிலானோர் தற்போது அங்கு விரைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பல்வேறு அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் காலி முகத்திடல் போராட்டக் குழுவின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இன்றைய போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, முன்னிலை சோசலிச கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட சுமார்

02



# நச்சுப் புகையை சுவாசித்ததால் 40 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

பாணந்துறையில் பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர்கள் நச்சுப் புகையை சுவாசித்ததால் திடீரென வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, பாணந்துறை நகரிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் 50க்கும் மேற்பட்ட மாணவர்களே பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வீடு அல்லது பாடசாலையைச் சுற்றியுள்ள இடங்களில் சில எரிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன், இதனால் ஏற்பட்ட புகை மூட்டத்தினால் இம்மாணவர்கள் சுவாசிப்பதில் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இதனையடுத்து, மாணவர்களை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# அம்பாறைமாவட்டதமிழ்சமூகத்தை அழிக்கும் செயற்பாட்டில் ஹரீஸ்

## கலையரசன் குற்றச்சாட்டு



கல்முனையில் தமிழ் சமூகத்தை அழிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிருவாகத்தை முடக்குவதற்கு பல குழுக்களை உருவாக்கியும் கிராம ரீதியான எல்லையை நிர்ணயித்தும் குளங்களை மண்போட்டு நிரப்பியும் தமிழ் மக்களின் பூர்வீக இடங்களை கபளீரம் செய்து தமிழ் மக்களின் எதிர்காலத்தை குழிதோண்டி புதைக்கின்ற செயற்பாட்டினை செய்து வருகின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர்

02


# வடக்கில் சரணாலயம் அமைக்க காணியை அடையாளம் காண ஜனாதிபதி பணிப்புரை



வடக்கு மாகாணத்தில் 1000 ஏக்கர் அளவில் சரணாலயத்தை அமைப்பதற்கு பொருத்தமான நிலத்தை அடையாளம் காணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

02

# கிண்ணியா வைத்தியசாலை சத்திரசிகிச்சையில் சாதனை



**ரவ்பீக் பாயிஸ்**

திருகோணமலை–கிண்ணியா தள வைத்தியசாலையில் முதல் தடவையாக ஐந்து மணித்தியாலங்கள் சத்திர சிகிச்சை மேற்கொண்டு வைத்தியர்கள் சாதனை படைத்துள்ளனர். கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த 58

02

# ரிஷாட் பதியுதீன் விடுதலை

ஈஸ்டர்தாக்குதல்தொடர்பாகதாக்கல்செய்யப்பட்டவழக்கில்இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக்க தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தாக்குதல்கள் தொடர்பான விசாரணைக்காக ரிஷாட் பதியுதீன் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். 2019 ஆண்டு இலங்கையில் பல இடங்களில் நடந்த குண்டு தாக்குதல்களில் 250 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளி வலய பிரதேச ஆசிரியர்களினால் திருமலையில் ஆர்ப்பாட்டம்



**( அ . அச்சுதன் ,அப்துல்சலாம் யாசீம்,ரவ்பீக் பாயிஸ்)**

அதிகஸ்ட பாடசாலையில் ஐந்து வருடங்கள் கடமையாற்றிய போதிலும் இடமாற்றம் வழங்கப்படாமையை கண்டித்து இன்று (02) கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு முன்னால் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 2023 ஆம் ஆண்டுக்கான இடமாற்ற விண்ணப்ப படிவம் கடந்த 2022ம் ஆண்டு ஏழாம் மாதம் 31ம் ஐந்து வருடங்கள் கடமையாற்றியவர்களுக்கு இடம் மாற்றம் வழங்குவதாக

02



## அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் கொழும்பில் ஆரம்பம்

20 கட்சிகளும் 150க்கும் அதிகமான சிவில் சமூக அமைப்புகளும் பங்கேற்கவிருப்பதாக அறிவித்துள்ளன. மேலும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் கொழும்பு ரயில் நிலையத்திற்கு முன்பாகவோ அல்லது அருகாமையிலோ இன்று போராட்டம் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது என பொலிஸார் அறிவித்தல் விடுத்துள்ளனர். கொழும்பு மத்திய பிரிவு இரண்டிற்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கே.. என்.தில்ருக்கின் கையொப்பத்துடன் இது தொடர்பான கடிதம் போராட்டத்தை ஏற்பாடு செய்யும் தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அம்பாறை மாவட்ட தமிழ் சமூகத்தை அழிக்கும் செயற்பாட்டில் ஹரீஸ்

தவராசா கலையரசன் தெரிவித்தார். சொறிக்கல்முனை ஹோலிக்குறோஸ் வித்தியாலய அதிபர் மற்றும் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் நேற்று (செவ்வாய்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் அதிதியாக கலந்து கொண்ட உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார். அம்பாறை மாவட்டத்தை பொறுத்த மட்டில் நாங்கள் தமிழர்களாக இருக்கின்ற நாங்கள் குறைந்த நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எம்மை நசிக்கி ஆழுகின்ற அரசியல் தலைவர்கள் பெரும்பான்மை சிங்கள மக்களை விட சகோதர முஸ்லீம் மக்கள் மத்தியில் இருந்து கொண்டிருக்கின்றனர். குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தமிழர்களுடைய எதிர்காலத்தை குழிதோண்டி புதைக்கின்ற செயற்பாடுகளிலே இருந்து கொண்டிருக்கின்றார் அவரின் செயற்பாட்டின் மூலம் இந்த இனங்களுக்கிடையே இருக்கின்ற ஒற்றுமை இல்லாமல் போய்விடும் நிலமை அதிகமாகவுள்ளது. நான் ஏனைய சமூகங்களை இனைத்து பயணிக்கின்ற அரசியல்வாதியாக இருந்திருக்கின்றேன் அவர் இன்று கூட ஒரு அறிக்கை விடுத்துள்ளார் தமிழர்கள் இரட்டைவேடம் போடுவதாக நாங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் இரட்டை வேடம் போட்டவர்கள் அல்ல ஒரு சமூகத்தை அழிக்கின்ற பணிகளை முன்னெடுத் தவர்கள் அல்ல அவ்வாறு முன்னெடுக்கின்ற ஒரு அரசியல்வாதி கல்முனை பிராந்தியத்தில் உள்ள நாடாளுமன்ற உறப்பினர் ஹரீஸ் இந்த நாட்டிலே தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் செயற்பட்டுவரும் ஒரே ஒரு கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்பு தான் அந்த தமிழ் பேசும் என்பது தமிழர்களையும் முஸ்லீம்களையும் உள்ளடக்கியதாக இருக்கும். ஆனால் அவர்கள் அவ்வாறு இல்லை இனம் மதம் என்ற அடிப்படையில் செயற்படுகின்ற அரசியல்வாதிகளாகவே அவர்கள் இருந்து கொண்டிருக்கின்றனா. அவர்களுடைய செயற்பாடு எதிர்காலத்தில் இந்த இரண்டு இனங்களையும் பிரிக்கின்ற அல்லது அழிக்கின்ற செயற்பாடாக இருக்கும். சமூகத்தை பிரிக்கின்ற நோக்கத்தோடு இந்த அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர் நாங்கள் அவ்வாறு இல்லை ஒரே சிந்தனை ஒரே கொள்கை ஒரே கோட்பாடு நாங்கள் வருகின்ற அரசாங்கத்துக்கு எல்லாம் கையை உயர்த்திவிட்டு காலில் விழுபவர்கள் அல்ல நாங்கள் துணிகரத்தோடு உண்மையை நியாயத்தை அநீதியை தட்டிக்கேட்கின்ற அரசியல்வாதிகளாக செயற்படுகின்றோமே தவிர நாங்கள் எந்த சலுகைகளுக்கும் துணையாக இருந்து செயற்படுபவர்கள் அல்ல என்பதை ஹரீஸ் நாடாளுமன்ற உறுப்பினருக்கு சொல்லி வைக்கின்றேன்.

கல்முனை வடக்கு பிரதேசம் நிர்வாக ரீதியாக இயங்குகின்றது அதன் நிர்வாக நடைமுறைகளை முடக்குகின்றார்கள் அதற்கு அரசாங்கத்தில் இருக்கின்ற சில அதிகாரிகள் துணையாக இருக்கின்றனர். எனவே இவ்வாறான அரசியல்வாதிகளை முஸ்லீம் சமூகம் இல்லாமல் செய்யவேண்டும் தமிழ் சமூகத்தையும் முஸ்லீம் சமூகத்தையும் சிங்கள மக்களையும் இணைக்கின்ற அரசியல்வாதிகளை நாங்கள் உருவாக்கவேண்டும் இதன் மூலம் தான் இந்த மாவட்டம் மாத்திரமல்ல மாகாணம் மாத்திரமல்ல இந்த நாடும் முன்னேறும்"

## வடக்கில் சரணாலயம் அமைக்க காணியை அடையாளம் காண ஜனாதிபதி பணிப்புரை

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள், சரணாலயங்கள் மற்றும் மிருகக்காட்சிசாலைகளை பார்வையிட தெற்கிற்கு வர வேண்டிய சூழல் காணப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலையில் பொருத்தமான காணிகளை ஆராயுமாறு வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

## வெளி வலய பிரதேச ஆசிரியர்களினால் திருமலையில் ஆர்ப்பாட்டம்

கூறி விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இருந்த போதிலும் தற்போது ஆறு வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதாக கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இதனால் ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி வருவதாகவும் இருநூறு கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்து வருகை தந்து தமது அதிர்ஷ்ட பாடசாலைகளுக்கு சென்று மாணவர்களுக்கு கல்வியை புகட்டுவதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அதி கஷ்ட பாடசாலைகளில் ஐந்து வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட இருந்த இடமாற்றத்தை கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் தடுத்து நிறுத்தியமை மன வருத்தத்தை ஏற்படுத்துவதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். கடந்த ஐந்து வருடங்கள் அதி கஷ்ட பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாட்டத்தை வழங்குமாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் புள்ளி நாயகத்திடம் வினவிய போது. இன்னும் இட மாற்றங்கள் எவருக்கும் வழங்கப்படவில்லை எனவும், தற்போது தரவுகள் மாத்திரம் பெறப்பட்டு வருவதாகவும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தவறான முறையில் எவரோ வழங்கிய தகவலின் அடிப்படையில் தேவையற்ற விதத்தில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

## கிண்ணியா வைத்தியசாலை சத்திரசிகிச்சையில் சாதனை

வயதுடைய பெண்ணொருவர் உணவுக் கால்வாயில் ஏற்பட்ட சுகவீனம் காரணமாக 20 வருடங்களாக கண்டி, கொழும்பு, குருணாகல் போன்ற வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக குறித்த பெண் சிகிச்சைகளுக்காக வேறு வைத்திய சாலைகளுக்கு செல்ல முடியாத நிலையில் மீண்டும் கிண்ணியா தள வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த நோயாளியை திருகோணமலையைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் கே.ஜெயந்தன் பரிசோதனை செய்துள்ளார்.

நோயாளி கடந்த 20 வருடங்களாக தான் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தனக்கு வேறு இடங்களுக்குச் சென்று சிகிச்சை மேற்கொள்ள முடியாது எனவும் தெரிவித்துள்ளதுடன், உணவு கால்வாயில் சுருக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் சத்திர சிகிச்சை மேற்கொண்டால் சீர் செய்ய முடியும் எனவும் சத்திர சிகிச்சை நிபுணர் கே.ஜெயந்தன் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து குறித்த பெண்ணிற்கு நேற்று (01) உணவு கால்வாயில் உள்ள சுருக்கத்தை சீர்செய்யும் சத்திர சிகிச்சை கிண்ணியா தள வைத்தியசாலையில் முதல் தடவையாக ஐந்து மணித்தியாளங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிண்ணியா தள வைத்தியசாலையில் தொழில்நுட்பம் மற்றும் வசதிகள் குறைந்து காணப்படும் இவ்வாறான நிலையில் இவ்வாறான ஒரு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது வரவேற்கத்தக்கது எனவும் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர். கிண்ணியா தள வைத்தியசாலையில் முதல் தடவையாக ஐந்து மணித்தியாளங்கள் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை இதுவாகும் எனவும் வைத்தியசாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச தண்டனை விலக்களிப்பு தினத்தை ஒட்டி திருமலையில் ஊடகவியலாளர்கினால் துண்டு பிரசூரம் விநியோகம்



**திருமலை ரவ்பீக் பாயிஸ்,எம்.எம். முபசிர்,எப்.நதீர்**

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனை இன்மையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சர்வதேச தண்டனை விலக்களிப்பு தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் ஊடகவியலாளர்களினால் எதிர்பு துண்டு பிரசூரம் விநியோகிக்கப்பட்டது. திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நிகழ்வு திருகோணமலை பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக இன்று (02) காலை 10 மணியளவில் ஆரம்பமானது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனை இன்மையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சர்வதேச தண்டனை விலக்களிப்பு தினத்தை முன்னிட்டு இன்றைய தினம் சுதந்திர ஊடக இயக்கத்தின் வழிகாட்டலில் திருவோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தினால் நாட்டில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள் கலை கலாச்சார செயல்பாட்டாளர்களது கொலைகளுக்கான விசாரணைகளும் இதுவரை மேற்கொள்ளப்படாமையையும் அதற்கான விசாரணை அறிக்கை வெளிவராமையையும் கண்டித்து குறித்த துண்டு பிரசூரம் விநியோகிக்கப்பட்டது.

தண்டனை விலக்களிப்புக்கு எதிர்ப்பைத் தெரிவியுங்கள்! ஊடகவியலாளர்களிடமிருந்து ஒரு வேண்டுகோள்.. எனும் தலைப்பில் குறித்த துண்டுப் பிரசூரம் விநியோகிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் திருவோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25096 | வே | 1984**
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

**21276 | வே | 1993**
புத்தூர் | இந்து | B.Eng
Engineer
பூராடம் (தனுசு)
172 செ.மீ | செவ்: 02

**23671 | வே | 1991**
குரும்பசிட்டி | இந்து | B.Com
Jr.Executive @ Bank
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**25090 | வே | 1990**
நயினாதீவு | இந்து | Diploma
Branch in charge
அஸ்வினி (மேடம்)
167 செ.மீ | செவ்: 04

**21372 | வே | 1988**
உரும்பிராய் | இந்து | MBA
Sr.Finance Executive
அஸ்வினி (மேடம்)
180 செ.மீ | செவ்: 12

**21297 | வே | 1987**
அரசடி | இந்து | AAT
Managing Partner
உத்தரம் (கன்னி)
177 செ.மீ | சு.செவ்: 12

**25081 | பி | 1986**
தெஹிவளை | இந்து | MD
Investigation Officer
பூராடம் (தனுசு)
167 செ.மீ

**20931 | வே | 1993**
கந்தர்மடம் | இந்து
MBBS | Doctor
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ

**20733 | வி | 1992**
யாழ்நகர் | இந்து | BSc
Senior QS | Qatar
கேட்டை (விருச்சிகம்)

**23788 | வே | 1995**
வேலணை | இந்து | BD
Software Engineer
சித்திரை (துலாம்)
168 செ.மீ

**20538 | வே | 1989**
காரைநகர் | இந்து | B.Eng,
MBA | Electrical Engineer
விசாகம் (துலாம்)
170 செ.மீ | சு.செவ்: 08

**21102 | வே | 1987**
மீசாலை | இந்து | BSc
Civil Engineer
பூசம் (கடகம்)
174 செ.மீ

**25087 | வே | 1986**
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

**21321 | வே | 1993**
புங்குடுதீவு | இந்து | BSc
Tech. Support Engineer
மூலம் (தனுசு)
185 செ.மீ | சு.செவ்: 09

**25105 | வே | 1990**
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

**20706 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | BSc
Civil Engineer | UK
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ | செவ்: 12

**25102 | வே | 1989**
வேலணை | இந்து | HND
Realtor & Insurance
Executive | பூராடம் (தனுசு)
170 செ.மீ | சு.செவ்: 03

**20850 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | BSc
Quantity Surveyor
பூராடம் (தனுசு) | UK
182 செ.மீ

**21324 | வே | 1987**
முல்லைத்தீவு | இந்து | BBA
Development Officer
கேட்டை (விருச்சிகம்)
177 செ.மீ | செவ்: 02

**21033 | கோ | 1992**
கைதடி | இந்து | BSc
Quantity Surveyor
புனர்பூசம் (மிதுனம்) | UAE
170 செ.மீ | செவ்: 07

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25099 | வே | 1983**
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

**21510 | வே | 1996**
இணுவில் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
169 செ.மீ | India

**20874 | வே | 1994**
வேலணை | இந்து | Reading
MBA | Audit Trainee
உத்தரட்டாதி (மீனம்)
156 செ.மீ | செவ்: 02

**23638 | வே | 1993**
கொழும்பு | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சு.செவ்: 10

**20619 | வே | 1991**
யாழ்நகர் | இந்து | ACCA
Assistant Manager
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ

**21471 | வே | 1990**
நீர்வேலி | இந்து | MD, SLAS
Assistant Director
மிருகசீரிடம் (மிதுனம்)
163 செ.மீ | செவ்: 08

**21333 | வே | 1985**
தும்பளை | இந்து | BA
Assistant | Divorced
சித்திரை (துலாம்) | UK
152 செ.மீ

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
அஸ்வினி (மேடம்) | கனடா
156 செ.மீ

**20694 | வே | 1995**
நெடுந்தீவு | இந்து
BFA | Teacher
பூராடம் (தனுசு)
153 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**20883 | வே | 1993**
வேலணை | இந்து | HNDA
Development Officer
விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ | செவ்: 07

**21444 | வே | 1991**
திருகோணமலை | இந்து
MSc | Software Engineer
பரணி (மேடம்)
153 செ.மீ | செவ்: 08

**21105 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | MD
Development Officer
பரணி (மேடம்) | Divorced
165 செ.மீ | சு.செவ்: 07

**21300 | வே | 1989**
சுழிபுரம் | இந்து | BSc
Dental Surgeon | சைவம்
கேட்டை (விருச்சிகம்)
157 செ.மீ | சு.செவ்: 10

**23710 | வே | 1996**
நெல்லியடி | இந்து
BSc | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சு.செவ்: 06

**21132 | கோ | 1994**
கைதடி | இந்து | Following
B.Com | Management
Assistant | சதயம் (கும்பம்)
156 செ.மீ | செவ்: 02
Divorced

**23749 | வே | 1993**
வவுனியா | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | Norway
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சு.செவ்: 06

**23821 | வே | 1998**
வவுனியா | இந்து
A/L | Accountant
பூரம் (சிம்மம்)
154 செ.மீ | செவ்: 07

**20853 | கோ | 1999**
சுன்னாகம் | இந்து
A/L | Accountant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 08

## அருந்ததி பிரைவட் லிமிட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# SALON AYNAH BRIDAL PVT (LTD) NIROSE NIJAMUDEEN
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி








Arunthathee
Presents
மாற்று மோதிரம்
COLOMBO 2023

**08th of January 2023**
**Contact 076 9759197**
**At BMICH MAIN HALL**


# மாவட்ட ஊடகப்பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற
## உயர்தர மாணவர்களுக்கான ஊடகக் கற்கை செயலமர்வு!!



















மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவின் ஏற்பாட்டில் தகவல் திணைக்களத்தின் அனுசரனையுடன் மட்டக்களப்பு மத்தி வலயத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின்

உயர்தர மாணவர்களுக்கான ஊடகக் கற்கை செயலமர்வொன்று இன்று காத்தான்குடியில் இடம்பெற்றுள்ளது.

க.பொ.த.உயர் தரத்தில் ஊடகக் கற்கைநெறியினை ஒருபாடமாகக் கற்கும் மற்றும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கான ஊடக செயலமர்வே இன்று (02) ஆந் திகதி புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே.கருணாகரனின் ஆலோசனைக்கு அமைவாக, மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவின் பொறுப்பதிகாரி வடிவேல் ஜீவாநந்தன் தலைமையில் காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பி.ப.1.30 மணிவரை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன் குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன், குறித்த நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஐ.எம்.இஸ்ஷத் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் ஊடகதுறை ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டு குறித்த செயலமர்வை சிறப்பித்துள்ளனர்.

இச் செயலமர்விற்கு வளவாளர்களாக மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், சிரேஸ்ட ஊடகவியலாளர் ரீ.எல்.ஜவ்பர்கான், றீம் ஸ்பேஸ் அகடெமியின் விரிவுரையாளர் சரபுல் ஆதில் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பான முறையில் வளவாண்மை செய்துள்ளனர்.

சமூக வலைத்தளங்களை கையாள்வதும் அதிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பாகவும், ஊடகத் துறையும் அனுபவ பகிர்வும் மற்றும் நவீன டிஜிடல் ஊடகத்துறையும் சவால்களும், வளர்ச்சியும் எனும் தலைப்புக்களில் வளவாண்மை இடம்பெற்றிருந்ததுடன், குறித்த செயலமர்வில் 130 இற்கு மேற்பட்ட மாணவர்கள் மீரா பாலிகா தேசிய பாடசாலை, காத்தான்குடி மத்திய கல்லூரி, மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலை, அல்-அமீன் மகா வித்தியாலயம், அல் ஹிறா மகா வித்தியாலயம், பாலமுனை அலிகார் மகா வித்தியாலயம் மற்றும் காங்கேயனோடை அல் அக்ஷா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து ஆர்வத்துடன் கலந்துகொண்டுள்ளனர்.

இந்நிகழ்வின் இறுதியில் பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளினால் இச்செயலமர்வில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பெறுமதிவாய்ந்த சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டதுடன், குறித்த செயலமர்வில் மாவட்ட ஊடகப்பிரிவின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு செயலமர்வினை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வனப்பகுதிக்குள் வைத்து காட்டு யானைகளுக்கு உணவுகளை வழங்க நடவடிக்கை எடுங்கள்

**கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெட்ணம் கோரிக்கை**

மட்டக்களப்பு மாவட்டத்தில் போரதீவுப்பற்று (வெல்லாவளி), மண்முனைதென்மேற்கு (பட்டிப்பளை) மண்முனைமேறகு (வவுணதீவு), ஏறாவூர்பற்று(செங்கலடி).கோறளைப்பற்று தெற்கு (கிரான்), கோறளைப்பற்று வடக்கு (வாகரை) போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள எல்லைக் கிராமங்களில் காட்டு யானைகள் இரவு பகலாக உணவுகளைத் தேடி அலைந்து திரிகின்றது. இப் பகுதியில் குளங்கள் அதிகமாக இருப்பதனால் குளக்கரையோரங்களிலுள்ள பற்றைக் காடுகளில் யானைகள் தங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

யானைகளைப் பொறுத்தவரையில் 2007ம் ஆண்டு மக்கள் இடம் பெயர்ந்த பின் காடுகளில் இருந்த யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து பயன் தரக்கூடிய மரங்கள், தானியவகைகள், ஏனைய உணவுப் பண்டங்கள் போன்றவற்றை உணவாக உட்கொண்டு பழகி விட்டதன் காரணமாக விவசாயம் செய்கை பண்ணப்படும் கால கட்டத்தில் அதிகமாக காட்டு யானைகள் கிரமங்களுக்குள் ஊடுருவி வீடுகள், வயல் வாடிகளை உடைத்து விதை நெல்,கச்சான், பயறு, சோளன் தென்னை, வாழை, பனை, மாமரம் போன்றவற்றை உணவாக உண்டும், அழித்தும் வருகின்றன.

உணவுக்காக காட்டு யானைகள் அலைந்து திரிவதனால் இதை கட்டுப்படுத்துவதற்கு குளங்களுக்குள் மேலுள்ள வனப்பகுதியில் காட்டு யானைகளுக்குத் தேவையான உணவுகளை வழங்குவதோடு, யானை வேலிக் கட்டைகளுக்கு நெற் சுற்றுவதனுடாகவும், இரவுக் கடமைகளில் யானை வேலி ஓரமாக காவலர்களை கடமையில் ஈடுபடுத்துவதன் ஊடாகவும், எல்லைக் கிராமங்களில் யானை அலுவலகங்களை அமைப்பதன் ஊடாகவும், மக்களுக்கு உயிராபத்தை விளைவிக்கும் யானைகளைப் பிடித்து வேறு இடம் மாற்றுவதனுடாவும் குறிப்பிட்ட வீதம் யானைகள் கிராமங்களுக்குள் உள் நுழைவதை கட்டுப்படுத்த முடியும்

கடந்த காலங்களில் 2007ம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் காட்டு யானைகளினால் தாக்கப்பட்டு 96ற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்தும், 85ற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தும், மா, பலா, வாழை தென்னை, சிறிய பனைமரங்கள் போன்ற பயன்தரக்கூடிய மரங்களை அழித்தும் பல ஏக்கர் கணக்கான மேட்டுநிலப்பயிர் செய்கை,வேளாண்மைச் செய்கை போன்றவற்றை அழித்தும், எல்லைக் கிராமங்களில் பயன் தரக் கூடிய மரக்கறிவிதை வகைகள், தானிய விதை வகைகள் ஒன்றும் கூட இல்லாத நிலை உருவாகியுள்ளது.

எனவே விரைவாக நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் மாவட்டத்தில் வறுமை தலை தூக்கும். ஆகவே மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் யானைகளினால் பாதிக்கப்பட்டு காயமடைந்தோர், வீடுகள் பாதிக்கப்பட்டோர்கள், விவசாயப்பாதிப்பு போன்றவற்றுக்கு நஸ்டஈட்டினை இலகுவான முறையில் மக்கள் பெற்றுக் கொள்வதற்கு இவ் அமைச்சு நிதியை ஓதுக்கீடு செய்யவும், யானை பாதிப்பு தொடர்பாக மாவட்டம், பிரதேசம் ரீதியாக அமைச்சர் தலைமையில் விசேட கூட்டங்களை கூட்டி முடிவு எடுக்கவும், ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன். என விரிவான கடிதம் ஒன்றை அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

# கௌரவமான அரசியல் தீர்வு கோரி அளவெட்டியில் போராட்டம்




**த.சுபேசன்**

இலங்கையின் வடக்கு–கிழக்கு வாழ் மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வினைக் கோரி யாழ்ப்பாணம்–அளவெட்டிப் பகுதியில் 02ஃ11 புதன்கிழமை வடக்கு–கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பினால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த அமைப்பினால் அரசியல் தீர்வு கோரி 100நாள் செயல் முனைவுப் போராட்டம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் 94வது நாள் போராட்டம் அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்றது. குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் பெண்கள்,இளையோர் அமைப்புக்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

# வீதியால் பிரயாணம் செய்ய முடியாத சூழ்நிலை கவனயீர்ப்பு போராட்டம்



**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னாரில் சில கிராமங்களை உள்ளடக்கிய பிரதான வீதியால் பிரயாணம் செய்ய முடியாத சூழ்நிலை காணப்படுவதுடன் அவசர நோயாளர்களை வாகனங்களில் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு வாகன ஓட்டிகள் தயக்கம் காட்டுவதையிட்டு வீதியை உடன் புனரமைத்து தரும்படி வேண்டி இவ் கிராம மக்கள் வீதியை மறித்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

இவ் சம்பவம் மன்னார் எழுத்தூர் பகுதியில் புதன்கிழமை (02.11.2022) காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை இடம்பெற்றது. இது தொடர்பாக இவ் மக்கள் கருத்து தெரிவிக்கையில் எங்களது இன்றைய (02.11.2022) இவ் கவனயீர்ப்பு போராட்டமானது மன்னார் நகர சபையின் பராமரிப்பில் இருந்து வரும் எழுத்தூர் சந்தியிலிருந்து தரவன்கோட்டை முக்கிய வீதியானது 2000 ஆம் ஆண்டளவில் புனரமைப்பு செய்யப்பட்டது.

ஆனால் ஒரு வருடத்துக்குள்ளேயே புனரமைப்பு செய்யப்பட்ட இவ் வீதி மிகவும் பாதிப்படைந்து குன்றும் குழியுமாக அவல நிலைக்கு மீண்டும் உள்ளாகியது.

இவ் வீதியால் முக்கியமாக பயணிக்கும் கிராம மக்கள் தோட்டக்காடு . சாந்திபுரம் , தரவன்கோட்டை , கீரி மற்றும் ஜீவன்புரம் ஆவர். இவ் வீதியை புரனமைப்பதற்காக அன்மையில் வெளியிடப்பட்ட ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி புனரமைப்பு திட்டத்தின் கீழ் இவ் வீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இவ் வீதி மன்னார் நகர சபையின் பராமரிப்பில் இருக்கும் வீதியாகும்.

இது தொடர்பாக இத்தனை கிலோ மீற்றர் இவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இவ்வளவு காலத்துக்குள் இது பூர்த்தி செய்யப்படும் என பாராளுமன்ற உறுப்பினர்களின் புகைப்படங்களுடன் விளம்பரப்பலகையும் போடப்பட்டிருந்தது. ஆனால் இவ் விளம்பரப்பலகை இவ் வீதி வேலை தொடங்குவதற்கு முன்பே போடப்பட்டு ஓரிரு மாதங்களுக்குள் அகற்றப்பட்டு இவ் திட்டமும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

ஆனால் இந்த வீதி தற்பொழுது எவரும் பயணிக்க முடியாத நிலையில் மிக மோசமான முறைக்கு தள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இதனூடாக பயணிப்போர் விபத்துகளுக்கு உள்ளாகும் நிலையும் காணப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட கிராமங்களில் இருக்கும் வயோதிபர்கள் பாடசாலை பிள்ளைகள் நோயாளிகள் யாவரும் பயணிக்கும் ஒரே பாதையாக இது காணப்படுகின்றது.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் தோட்டக்காடு கிராமத்தில் ஒருவருக்கு பாம்பு கடித்துவிட்டது. அப்பொழுது முற்சக்கர வண்டியில் அவ் நோயாளியை கொண்டு செல்ல முற்சக்கர வண்டி ஓட்டுநர் எவரும் வீதியின் அவலநிலையால் முன்வரவில்லை. இவ்வாறான சூழ்நிலையை கவனத்தில் எடுத்தே இவ் வீதியை உடன் புனரைப்பு செய்யும்படி இவ் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம் என இவ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

# கிழக்கில் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பயிற்சி பட்டறை




**( வி.ரி. சகாதேவராஜா)**

சமூக வலைத்தளங்களை கையாளும் முறை தொடர்பான பயிற்சி பட்டறைகள் கிழக்கு மாகாணம் எங்கும் நடத்தப்பட்டு வருகின்றன. இலங்கைஉள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் ரனெி நிறுவனத்தின் அனுசரணையில், சிடி எல் ஜி திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் செயல்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களில் 50 வயதுக்கு குறைந்த ஆண் பெண் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்காக இப் பயிற்சி பட்டறைகளை நடாத்தி வருகின்றது.

அம்பாறை மாவட்டத்துக்கான முதல் பயிற்சி பட்டறை அக்கரைப்பற்று மாநகர சபை மண்டபத்தில் இன்று (2) புதன்கிழமை நடைபெற்றது. அங்கு சமூக வலைத்தளங்களை கையாளுதல் தொடர்பாக விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. நாளை மூன்றாம் திகதியும், நாளை மறுதினம் நான்காம் திகதி யும் முறையே மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் திருகோணமலை மாவட்டத்திற்கும் இப் பட்டறைகள் நடாத்தப்பட இருக்கின்றது.

# புதிய பணிப்பாளர் அனிருத்தனனுக்கு சர்வதேச இந்து மத பீடம் வாழ்த்து

**தலவாக்கலை பி.கேதீஸ்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக பதவியேற்றுள்ள திரு.ய.அனிருத்தனனுக்கு சர்வதேச இந்து மத பீடத்தின் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாக சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், திரு.அ.உமா மகேஸ்வரன் அவர்கள் கடந்த எட்டு வருடங்களாக பணிப்பாளராக கடமையாற்றி வடமாகாண சபைக்குப் பிரதிப் பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றதையடுத்து திரு.ய.அனிருத்தனன் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக, பொதுச் சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளராக, ஒட்டி சூட்டான் பிரதேச செயலாளராக மற்றும் இலங்கை அபிருத்தி நிர்வாக சேவை நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவின் பணிப்பாளர் என பல்வேறு பதவிகளை அர்ப்பணிப்புடன் ஆற்றிய இவர் இலங்கை நிர்வாக சேவையின் முதல் தர அதிகாரியும் ஆவார். இவரது



பதவிக்காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிகள் மேன்மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துகிறேன் என்றார்.

# திருக்கோவில் பிரதேசம் விநாயகபுரத்தில் புதிய நூலகம் திறந்து வைப்பு



**திருக்கோவில் நிருபர்-எஸ். கார்த்திகேசு)**

அம்பாரை திருக்கோவில் பிரதேச சபையினால் விநாயகபுரத்தில் புதிய நூலகம் ஒன்று இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வானது திருக்கோவில் பிரதேசசபையின் தவிசாளர்இ.வி.கமலராஜன்தலைமையில் விநாயகபுத்தில் இன்று இடம்பெற்று இருந்தன. விநாயகபுரம் கிராமத்தினை சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களின் நன்மை கருதி திருக்கோவில் பிரதேசசபையினால் புனரமைக்கப்பட்டு இன்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளன.


இந்நிகழ்வின் போது பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு இருந்ததுடன் நூலகத்திற்கு புத்தகங்களும் அன்பளிப்பு செய்யப்பட்டு இருந்தன. அந்தவகையில் விநாயகபுரம் பொது நூலகத்திற்கான புத்தகங்களை திருக்கோவில் பிரதேச எழுத்தாளர்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகள் கல்வியாளர்கள் வழங்கி இருந்ததுடன் நூல்கள் வைத்திருப்பவர்கள் தங்களால் வழங்கக்கூடிய புத்தகங்களை விநாயகபுரம் நூலகத்திற்கு வழங்கி நூலகத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குமாறு கோரிக்கையும் விடுக்கப்பட்டு இருந்தன.

இந்நிகழ்வில் ஆன்மீக அதிதியாக விநாயகபுரம் சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஆறுமுக கிருபாகர சர்மா திருக்கோவில் பிரதேசசபையின் தவிசாளர் இ.வி. கமலராஜன் உதவி தவிசாளர் எஸ். விக்கினேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினர் ரீ.கலையரசனின் பிரத்தியேக செயலாளர் கண்ணதாசன் பிரதேச சபை உறுப்பினர்கள் அரச அதிகாரிகள் சமய நிறுவனங்களின் தலைவர்கள் மாணவர்கள் நூலக உத்தியோகத்தர்கள் அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# மலையகத்தின் ஏனைய அரசியல் தரப்புகளுடன் செயற்படுவதற்கு தயாராக உள்ளேன்

## ஜீவன் தொண்டமான்

**தலவாக்கலை பி.கேதீஸ்**



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையக திறப்புவிழாவில் பங்கேற்குமாறு மலையக அரசியல் கட்சிகளும், தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கங்களும் மனமுவந்து எனக்கு அழைப்பு விடுத்தன. அதன் காரணமாக அந்நிகழ்வில் நான் பங்கேற்றேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது

மக்களின் நலன் சார்ந்த விடயங்களில் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் மலையகத்தின் ஏனைய அரசியல் தரப்புகளுடன் புரிந்துணர்வுடனும், நல்லெண்ணத்துடனும் செயற்படுவதற்கு நான் தயாராக உள்ளேன் . அழைப்பு விடுத்தால் அதனை ஏற்றுக் கொண்டு செல்வதுதான் நாகரிகம். நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற உணர்வு எமக்குள் இருக்க வேண்டும். நான் குறித்த நிகழ்வில் பங்கேற்றது தொடர்பில் பலருக்கு பலவித வேறுபட்ட உணர்வுகளாக இருக்கலாம். ஆனால் எமது சமூகத்தை முன்னேற்றுவதற்கு ஒன்றிணைந்த வேலைத்திட்டம் அவசியம் என்பதை நாம் மறக்கலாகாது. அதற்கான ஆரம்பமே இதுவாகும். நான் அரசியல் களத்தில் பயணிக்க ஆரம்பித்த காலம்தொட்டு எத்துறையைச் சார்ந்த அரசியல், தொழிற்சங்கம், பல்துறையைச் சார்ந்தவர்களுக்கு மதிப்பளித்து அவர்களுடைய அனுபவங்களையும், துறைசார்ந்த நிபுணத்துவத்தையும் மதிப்பளித்து நடந்துக்கொள்வதுதான் அனுகுமுறையாக பார்க்கின்றேன். அந்தவகையில் எதிர்காலத்திலும் இவ்வாறான மூத்த அனுபவமிக்கவர்களுடன் கைகோர்த்து பயணிப்பதே எனது இலக்காகும். வெறுப்பையும் எதிர்ப்பையும் வைத்து இனிமேலும் அரசியல் செய்ய முடியாது. அவ்வாறான அரசியல் பிளவு கொண்ட அரசியல் போக்கில் நாம் நீடித்துச் செல்ல முடியாது என்பது எனது குறுகிய கால அரசியல் வாழ்வில் நான் கற்றுக் கொண்ட அனுபவம் ஆகும். அன்பினாலும் நல்லிணக்கப்பாட்டினாலுமே எமது மக்களுக்கான நன்மைகள் சாத்தியப்படும். அன்றைய சந்திப்பின்போது மலையக அரசியல் கட்சிகளுக்கிடையே அரசியல் ரீதியாக ஒற்றுமை இல்லாவிட்டாலும் அக்கட்சிகள் அனைத்தும் புரிந்துணர்வோடு செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. அவ்வாறே இ.தொ. காவின் பொதுச்செயலாளர் என்ற ரீதியில் மலையக மக்களின் நலன் சார்ந்த எல்லா விடயங்களிலும் இணக்கப்பாட்டுடன் பயணிக்க நான் தயாராகவுள்ளேன். அதேபோன்று மலையக அரசியல் கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும் பட்சத்தில், நாம் முட்டிமோதிக் கொள்ளாமல் ஆரோக்கியமான முறையில் எங்கள் வழியில் பயணிப்போம். அத்தோடு நான் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமை காரியாலய திறப்பு விழாவில் கலந்துக்கொண்டமையானது கட்சி பேதமின்றி அனைத்து இளைஞர்கள் மத்தியிலும் வரவேற்பையும், நல்லினகத்தையும் வெளிப்படுத்துகின்றது. ஆகவே இளைஞர்களாகிய நீங்கள் இவ்விடயத்தை மக்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு நல்லெண்ணத்துடன் எமது மக்கள் மத்தியில் கொண்டு செல்வீர்கள் என நம்புகின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.




# பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்ட தனியார் பேருந்து சாரதிகள்

**ந.குகதர்சன்**






போக்குவரத்து பயணிகள் அதிகார சபைக்குட்பட்ட வாழைச்சேனை தனியார் பேருந்து சாரதிகள் இன்று புதன்கிழமை காலை பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு மாவட்ட வீதிப் போக்குவரத்து பயணிகள் அதிகார சபையின் காரியாலயத்தில் கடந்த மாதம் 18ம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் வாழைச்சேனை தனியார் பேருந்து சாரதிகளால் தங்களுக்கு சுழற்சி முறையில் பேருந்துக்களை பயணம் செய்வதற்கு ஏற்பாடுகளை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்த நிலையில் ஒக்டோபர் மாதம் 31ம் திகதிக்குள் சுழற்சி முறையில் பேருந்துக்களை பயணம் செய்ய ஏற்பாடு செய்து தருவதாக மாவட்ட பணிப்பாளர் வாக்குறுதி வழங்கிய நிலையில் இன்றுவரை ஏற்பாடு செய்து வழங்காத காரணத்தினால் வாழைச்சேனை தனியார் பேருந்து சாரதிகள் புதன்கிழமை அதிகாலை முதல் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதுவிடயம் தொடர்பில் திருகோணமலை வீதிப் போக்குவரத்து பயணிகள் அதிகார சபையின் பணிப்பாளர் வாழைச்சேனை தனியார் பேருந்து சாரதிகள் தரிப்பு நிலையத்திற்கு வருகை தந்து சாரதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார். இதன் பிரகாரம் எதிர்வரும் 8ம் திகதி சுழற்சி முறையில் பேருந்துக்களை பயணம் செய்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு தருவதாக வாக்குறுதி வழங்கினார். திருகோணமலை வீதிப் போக்குவரத்து பயணிகள் அதிகார சபையின் பணிப்பாளரின் வாக்குறுதியை தொடர்ந்து இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு தனியார் பேருந்துகள் வழமையான முறையில் பயணம் செய்யப்பட்டதுடன், எதிர்வரும் எட்டாம் திகதி எங்களுக்கான தீர்வுகள் கிடைக்காது விடும் பட்சத்தில் போராட்டம் மீண்டும் தொடரும் என சாரதிகள் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான பேருந்துகள் மாத்திரம் காலையில் சேவையில் ஈடுபட்டது.



# சிட்னியில் வெளியாகும் சபேசனின் காற்றில் தவழ்ந்த சிந்தனைகள்:

# கங்காரு நாட்டின் காற்றலைகளில் கால் நூற்றாண்டாக ஒலித்த குரல்!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**


(தமிழ்த் தேசியப்பற்றாளர் சபேசன் சண்முகம் எழுதிய காற்றில் தவழ்ந்த சிந்தனைகள் இவ்வாரம் (05/11/2022) சனிக்கிழமை 'சிட்னி இலக்கியச் சந்திப்பு' நிகழ்வில் வெளியிடப்பட உள்ளது.)

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை உளமார ஏற்று, தாயக மக்களுக்கான விடுதலைப்பணியில், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு மெல்பேணில் செயற்பட்ட தமிழ்த்தேசியபற்றாளரே சபேசன் சண்முகம். 3இ கீ தமிழ்க்குரல் வானொலியில் தங்கு தடையின்றி, வாரம்தோறும் அரசியல் விமர்சன கட்டுரைகளை எழுதி தனது குரலிலேயே ஒலிபரப்பியதை அவுஸ்ரேலியாவில் யாரும் மறக்க மாட்டார்கள்.

தமிழ்த்தேசியத்தை நிலைப்படுத்துவது எனின் தமிழ்மொழியை வளர்த்து, தமிழ்ப் பண்பாட்டை பின்பற்றி வளரவேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தி முனைப்பாக செயற்பட்ட சபேசன் சண்முகம் 2020 மே 29இல் தன் வாழ் நாள் கனவுகளுடன் மீளாத் துயில் கொண்டார்.

## நீராவியடி தந்த தமிழ்மகன்:

யாழ்ப்பாணம், நீராவியடியில் 1954 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 06 ஆம் திகதி சண்முகம் - பர்வதலக்ஷ்மி தம்பதியரின் மூத்த புதல்வனாகப் பிறந்த சபேசன், கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி ஆஸ்திரேலியா மெல்பனில் மறையும் வரை , பல்வேறு தமிழர் அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டு வந்தார். தாயக கனவுகளுடன் மீளாத்துயில் கொள்ளும் சபேசனை நினைவு கூறுவது காலக் கடமையாகும்

இளையோர் மத்தியில் தமிழ்மொழி மீதான பற்றுதலை ஏற்படுத்துவதிலும் தமிழ்த்தேசிய ரீதியான விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டவர். அத்துடன் தமிழ்மொழி முறையில் பாரம்பரிய திருமணங்களை நடத்துவதிலும் முன்னின்றவர்.

## யாழ் இந்துவின் ஒப்பற்ற திறமையாளன்:

யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் மாணவரான அவர், 1989 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மெல்பேனுக்கு புலம்பெயர்ந்து வந்தபின்னர், விக்ரோரியா ஈழத்தமிழ்ச்சங்கம், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முதலானவற்றில் அங்கம் வகித்தவர். தமிழர் வாழ்வியலோடு தொடர்புபட்ட நிகழ்வுகள் பற்றி, ஆய்வு நோக்கில் தகவல்களை சேகரித்து அதனை முழுமையான தகவற்பெட்டகமாக மக்கள் முன்கொண்டுசெல்வதில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டிருந்தார்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில், விக்ரோறியா மாநில தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் பொறுப்பாளராகவும், தென்துருவ நாடுகளின் பரப்புரைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டிருந்தார். மெல்பேணில் இருந்து முழங்கிய தமிழ்க்குரல் (3CR) வானொலி ஊடாக 28 ஆண்டுகளுக்கு மேலாக, தனது தமிழ்த்தேசிய அரசியல் கருத்துக்களை அனைவரும் கவரும் விதத்தில் வெளிப்படுத்தியும் வந்தார்.




## தமிழ்த் தேசியப்பற்றாளர் சபேசன் சண்முகம் :

உரிமைப் போராட்டத்தின் மீது அளவற்ற பற்றோடு செயற்பட்ட சபேசன் மிகவும் ஆக்கபூர்வமான அரசியல் விடுதலை போராட்டம் தொடர்பான கட்டுரைகளை எழுதி, அனைவர் மனத்திலும் இடம்பிடித்தவர்.

அவ்வாறு எழுதப்பட்ட கட்டுரைகளை தொகுத்து நூலாக்கவேண்டும் என்ற எண்ணம் கைகூட முன்னர் எதிர்பாராமல் உடல்நலம் பாதிப்புற்று மறைந்துவிட்டார்.

தமிழர் மருத்துவ நிதியத்துடன் இணைந்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகவும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து 25 ஆண்டுகளுக்கு மேலாகவும், வானொலி நிதிசேகரிப்பு (Radiothon) நிகழ்வை ஒழுங்குபடுத்திக்கொடுத்து, தாயக மக்களின் மேம்பாடுகளுக்காக சபேசன் பேருதவி புரிந்தவர். தனது அரசியல் நிலைப்பாடுகளிலிருந்து வேறுபட்டிருந்தவர்களுடனும் இனிமையான புன்முறுவலுடன் பழகி தனது நிலைப்பாடுகளை உறுதியாக முன்வைப்பவராக விளங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## காற்றில் தவழ்ந்த சிந்தனைகள் :

தனது நூல் வெளியீடு தாயக மண்ணில் நிகழ வேண்டும் என எண்ணியிருந்தார். எனினும் சபேசனின் அந்தக் கனவு அப்போது நனவாகவில்லை. அவரின் நூல் வெளியீடு மட்டுமல்ல இதர கனவுகளும் நனவாகாமல் திடீரென2020இல் மறைந்தது தீராத சோகம் தான்.

தனது வலிமைமிகு எழுத்துக்களாலும் பேச்சுக்களாலும் கள உண்மைகளை மக்கள் முன்கொண்டு செல்வதில் கடுமையாக உழைத்தவர்.

## சிட்னியில் நூல் அறிமுகம் :

அவரது மறைவுக்குப்பின்னர் வெளியாகிய காற்றில் தவழ்ந்த சிந்தனைகள் நூல் ஏற்கனவே மெல்பேணில் வெளியிடப்பட்டது. சிட்னியில் இந்நூலைப் பற்றிய அனுபவப் பகிர்வும் வாசிப்பும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை Toongabbie Community Centre மண்டபத்தில் நடைபெற உள்ளது.

தாயகத்தில் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட பெரும்போரில் பேரழிவை எமது மக்கள் எதிர்கொண்ட போது, சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் அனைத்து மக்களையும் ஒன்றுபடுத்தி, கடும் சிரமங்களுக்கு மத்தியிலும் , நீண்ட பயணங்களை மேற்கொண்டு, பல்வேறு கவனயீர்ப்பு நிகழ்வுகளிலும் பங்குகொண்டு சபேசன் சண்முகம் செயற்பட்டிருந்தார்.

## மாற்றம் வரும் என எதிர்பார்த்தவர் :

ஈழத்தில் முப்பது ஆண்டு காலமாக நீடித்திருந்த போர் 2009 ஆம் ஆண்டு மேமாதம் மௌனித்த போது, அக்காலத்தில் நேர்ந்த உயிரிழப்புகளினால்

பெரிதும் கலங்கி, மனவுளைச்சலுக்கும் ஆளாகியிருந்தவர் சபேசன். தமிழ் மக்கள் சந்தித்த முள்ளிவாய்க்கால் பேரழிவால், மிகவும் மனமுடைந்துபோன அவர், அதனைத் தொடர்ந்த நாட்களில் மனரீதியாக அதன் பாதிப்புகளில் இருந்து மீளமுடியாதவராக மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். மாற்றம் வரும் என எதிர்பார்த்தேன், ஏமாற்றம்தான் மிஞ்சியது, எஞ்சியது என்று அவர் மறைவுக்கு முன்னர் கூட சொல்லிக்கொண்டிருந்தார் என்பதை பலரும் அறிவர்.

வன்னி பெரு நிலப்பரப்பில் அவர் உளமாற நேசித்த மக்கள், தமிழ்நாட்டில் அவர் நெருங்கிப்பழகிய பல தமிழ்த்தேசிய உணர்வாளர்கள், மற்றும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் என பெருந்தொகையானோரைக்கொண்ட வாசகர்களையும் வானொலி நேயர்களையும் சபேசன் பெற்றிருந்தவர் என்பது உண்மையே.

மெல்பேணில் இருந்து தமிழ் முழங்கிய 3 இ கீ தமிழ்க்குரல் வானொலியில் கால் நூற்றாண்டு காலம் கங்காரு நாட்டின் காற்றலைகளில் ஓங்கி ஒலித்த அவரின் குரல் ஓய்ந்துள்ளது. தமிழ ஊடகவியலாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கிய தமிழ்த் தேசிய பற்றாளர் சபேசன் சண்முகம் இழப்பு ஈடு செய்யப்பட முடியாத இழப்பாகும்.

